# நீதி வழங்குதலில் இந்தியாவிலேயே தமிழகம் 2வது இடத்தில் உள்ளது.
# தென் மாநிலங்கள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றன என 3வது இந்திய நீதித்துறை அறிக்கை எடுத்துரைக்கிறது

***முன்னேற்றத்தை எடுத்துரைக்கும் சில மேம்பாடுகள்:***

- *சட்ட உதவிக்கான நிதி ஒதுக்கீட்டை மாநிலங்கள் அதிகரித்து வருகின்றன.* **2021-22** *நிலவரப்படி, சட்ட உதவி வரவு செலவுத் திட்டங்களில் அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள்* **60** *சதவீதத்திற்கும் மேலாகப் பங்களித்துள்ளன.*
- *தேசிய அளவில், சார்நிலை நீதித்துறையில் பெண்களின் பங்கு,* **33%***-ஐ தாண்டியுள்ளது.*
- *தேசிய அளவில், காவல் துறைக்கான செலவினங்களில் தனி நபர் பங்கு ரூ.* **912 (***நிதியாண்டு* **'17-18)** *இலிருந்து ரூ.* **1151 (***நிதியாண்டு* **'20-21)** *என உயர்ந்துள்ளது.*
- *வீடியோ கான்பரன்சிங் வசதி கொண்ட சிறைகள்* **60%** *இலிருந்து* **84%** *ஆக அதிகரித்துள்ளது (***IJR 2020)**

***ஆனால், தேசிய அளவில், சில இடைவெளிகள் அறியப்படுகிறது:***

- ***சிறையிலுள்ள கைதிகளின் எண்ணிக்கை அனுமதிக்கப்பட்ட அளவை விட*** 130% ***க்கும் மேலாக உள்ளது,*** 2010***க்குப் பிறகு தற்போது அதிகபட்ச அளவிலுள்ளது; சிறையிலுள்ள கைதிகளில் மூன்றின் இரண்டு பங்குக் கைதிகளுக்கு இதுவரை தண்டனை வழங்கப்படவில்லை (விசாரணைக் கைதிகள்)***
- ***கடந்த பத்தாண்டுகளில் காவல் துறையில் பெண் அதிகாரிகளின் எண்ணிக்கை இரட்டிப்படைந்த போதிலும், பெண் அதிகாரிகள்*** 11.75% ***அளவு மட்டுமே உள்ளனர்.***
- ***உயர்நீதிமன்ற நீதிபதிகள், காவல்துறை அதிகாரிகளுக்கான பணியிடங்கள் கிட்டத்தட்ட*** 30% ***அளவு காலியாக உள்ளன.***
- ***தேசிய அளவில், சட்ட உதவி கிளினிக்குகள்*** 44% ***குறைந்துள்ளன (***2019-20***ல்*** 23,022 ***ஆக இருந்தது*** 2020-21***ல்*** 12,976 ***ஆகக் குறைந்துள்ளது)***

***ஏப்ரல்* 4, 2023, *புது தில்லி:*** 2022 *நீதி வழங்குதலில் தேசிய மட்டத்தில் மாநிலங்களின் பணியைத் தர வரிசைப்படுத்தும் இந்தியாவின் ஒரே அறிக்கையான இந்திய நீதி அறிக்கை (*IJR*இன்று அறிவித்த தரவரிசைப்படி,* 18 *பெரிய மற்றும் நடுத்தர மாநிலங்களில் (தலா ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்டவை) கர்நாடகா முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (*2020: 2*வது), தெலுங்கானா (*2020: 3*வது) குஜராத் (*2020: 6*வது) மற்றும் ஆந்திரப் பிரதேசம் (*2020: 12*வது) பட்டியிலடப்படுள்ளது. ஏழு சிறிய மாநிலங்களின் பட்டியலில் (தலா ஒரு கோடிக்கும் குறைவான மக்கள் தொகை கொண்டவை) சிக்கிம் (*2020: 2*வது), அருணாச்சலப் பிரதேசம் (*2020: 5*வது) மற்றும் திரிபுரா (*2020: 1*வது) ஆகியவை முதலிடத்தில் உள்ளன.*

*இது* 2019 *இல் டாடா அறக்கட்டளைகளால் தொடங்கப்பட்ட இந்திய நீதி அறிக்கையின் (*IJR), *மூன்றாவது பதிப்பாகும். சமூக நீதி மையம், காமன் காஸ், காமன்வெல்த் மனித உரிமைகள்*

முன்முயற்சி, DAKSH, TISS-Prayas, விதி சட்டக் கொள்கைக்கான மையம் மற்றும் IJR இன் தரவுப் பங்காளர் ஹௌ இந்தியா லிவ்ஸ் ஆகியவை கூட்டாளர்களில் அடங்கும்.

கட்டாய சேவைகளைத் திறம்பட வழங்குவதற்கு மாநிலங்கள் தங்கள் **நீதி வழங்கல் கட்டமைப்புகளைச் செயல்படுத்துவதில்** காட்டியுள்ள முன்னேற்றத்தை, கடந்த காலத்தில் இருமுறை மேற்கொண்டது போலவே, தீவிர 24-மாத அளவறிப் பகுப்பின் மூலம் IJR 2022 கண்காணித்துள்ளது. சமீபத்திய அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களின் அடிப்படையில், அதிகாரப்பூர்வ அரசாங்க ஆதாரங்களில் இருந்து, நீதி வழங்கலின் நான்கு தூண்களான - காவல்துறை, நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் சட்ட உதவி குறித்த, பொதுவாக மறைக்கப்பட்ட தரவுகளை இணைத்து வழங்குகிறது. ஒவ்வொரு துறையும் அதன் வரவு செலவுக் கொள்கை, மனித வளங்கள், பணிச்சுமை, பன்முகத்தன்மை, உள்கட்டமைப்பு மற்றும் போக்குகள் (ஐந்தாண்டு காலத்தில் மேம்படுத்தும் நோக்கம்) ஆகியவை சார்ந்து மாநிலம் அறிவித்த தரநிலைகள் மற்றும் வரையறைகளுக்கு எதிராக பகுப்பாய்வு செய்யப்பட்டது. இந்த மூன்றாவது IJR ஆனது 25 மாநில மனித உரிமை ஆணையங்களின் திறனையும் தனித்தனியாக மதிப்பிட்டுள்ளது. (மேலும் அறிய SHRC சுருக்கத்தைப் பார்க்கவும்).

**தமிழ்நாட்டின் செயல் திறன்**

இரண்டாவது முறையாகத் தங்கள் தரவரிசையைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் தனது செயல்திறனை மேம்படுத்தியுள்ளது. IJR 2019-இல், 3 வது இடத்தில் இருந்த தமிழகம், ஜனவரி 2021-இல் வெளியிடப்பட்ட அடுத்த அறிக்கையில், செயல்திறனை மேம்படுத்தி, 2-வது இடத்திற்கு உயர்ந்தது. சிறைச்சாலைகள் துறையைப் பொறுத்தவரை, தமிழ்நாடு IJR 2020-இல் 6 வது இடத்தில் இருந்து இந்த ஆண்டு முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளது. மற்றும் 2019 முதல் நீதித்துறையில் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலமாகத் திகழ்கிறது.

2020 மற்றும் 2022-க்கு இடைப்பட்ட காலத்தில் ஒப்பிடத்தக்க 61 குறிகாட்டிகளில், தமிழ்நாடு 41 குறிகாட்டிகளில் அனைத்து துறைகளிலும் மேம்பட்டுள்ளது. இந்திய நீதி அறிக்கையின் மூன்றாவது பதிப்பில், பின்வரும் முக்கியக் காரணங்களால் இம்மாநிலம் தனது இரண்டாவது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது:

1. 2019 டிசம்பரில் 34% ஆக இருந்த சீர்திருத்த பணியாளர் காலியிடங்களை 2021 டிசம்பரில் 15% ஆகக் குறைத்துள்ளது.
2. 18 பெரிய மற்றும் நடுத்தர மாநிலங்களில் பணி நிலை, சீர்திருத்தம், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் மருத்துவர்களிடையே மிகக் குறைந்த காலியிடங்களைக் கொண்டுள்ளது.
3. அனைத்துத் துறைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்து மாவட்ட நீதிமன்றங்களில் பெண்களின் எண்ணிக்கை 40% மற்றும் PLVகளில் 49% ஆகா உள்ளது.
4. காவலர் படைத் தொகுதியில் அதன் எஸ்சி, எஸ்டி, ஓபிசி ஒதுக்கீட்டை முழுமையாக நிறைவேற்றியது.
5. மாநிலம் முழுவதும் உள்ள 142 சிறைகளில் சராசரியாக 76% சிறைவாசிகள் உள்ளனர், பெரிய அளவிலான மாநிலங்களில் 150% மற்றும் அதற்கும் அதிகமான கைதிகள் கொண்ட சிறைகளில் தமிழ்நாட்டின் பங்கு மிகவும் குறைவாக உள்ளது (1%).

18 **பெரிய மற்றும் நடுத்தர மாநிலங்களின் தரவரிசையானது:**

| மாநிலங்கள் | தரவரிசை 2022 | தரவரிசை 2020 |
|---|---|---|
| கர்நாடகா | 1 | 14 |
| தமிழ்நாடு | 2 | 2 |
| தெலுங்கானா | 3 | 3 |
| குஜராத் | 4 | 6 |
| ஆந்திரப் பிரதேசம் | 5 | 12 |
| கேரளா | 6 | 5 |
| ஜார்கண்ட் | 7 | 8 |
| மத்திய பிரதேசம் | 8 | 16 |
| சத்தீஸ்கர் | 9 | 7 |
| ஒடிசா | 10 | 4 |
| மகாராஷ்டிரா | 11 | 11 |
| பஞ்சாப் | 12 | 1 |
| ஹரியானா | 13 | 9 |
| உத்தராகாண்ட் | 14 | 15 |
| ராஜஸ்தான் | 15 | 10 |
| பீகார் | 16 | 13 |
| மேற்கு வங்காளம் | 17 | 17 |
| உத்தரப்பிரதேசம் | 18 | 18 |

*ஏழு சிறிய மாநிலங்களின் தரவரிசை:*

| மாநிலங்கள் | தரவரிசை 2022 | தரவரிசை 2020 |
|---|---|---|
| சிக்கிம் | 1 | 2 |
| அருணாச்சல பிரதேசம் | 2 | 5 |
| திரிபுரா | 3 | 1 |
| மேகாலயா | 4 | 7 |
| மிசோரம் | 5 | 6 |
| ஹிமாச்சல பிரதேசம் | 6 | 4 |
| கோவா | 7 | 3 |

***<u>தேசிய அளவில் காணுகையில், மேம்பாடுகள் அறியப்படுகின்றன இருந்தும் குறைபாடுகள் தொடர்கின்றன</u>***

*அகில இந்திய அளவில் ஒருங்கிணைத்துக் காணும் போது, இதற்கு முந்தைய இரண்டு மதிப்பீடுகளைப் போலவே, IJR 2022-இலும் தொடர்ச்சியான குறைபாடுகளைக் காண முடிக்கிறது.*

*காலிப்பணியிடங்கள் என்பது காவல்துறை, சிறை ஊழியர்கள், சட்ட உதவி மற்றும் நீதித்துறை ஆகியவற்றில் ஒரு பிரச்சினை.*

*1.4 பில்லியன் மக்களுக்கு, இந்தியாவில் சுமார் 20,076 நீதிபதிகள் உள்ளனர், சுமார் 22% அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளன. உயர் நீதிமன்ற நீதிபதிகளில் 30% காலியிடங்கள் உள்ளன. டிசம்பர் 2022 நிலவரப்படி, அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுக்கு எதிராகக் கணக்கிடப்படும் போது, இந்தியாவில் ஒரு மில்லியன் மக்கள்தொகைக்கு 19 நீதிபதிகளே இருந்தனர், மேலும் 4.8 கோடி வழக்குகள் தேக்கமடைந்திருந்தன. பத்தாண்டுகளில் ஒரு மில்லியன் மக்களுக்கு 50 நீதிபதிகள் இருக்க வேண்டும் என 1987-ஆம் ஆண்டிலேயே சட்ட ஆணையம் விரும்பியது.*

*கடந்த பத்தாண்டுகளில் காவல்துறையில் பெண் அதிகாரிகளின் எண்ணிக்கை இருமடங்காகி இருந்தாலும் 11.75% மட்டுமே உள்ளது. 29% அதிகாரி பணியிடங்கள் காலியாக உள்ளன. காவல்துறை மற்றும் மக்கள் தொகை விகிதம் ஒரு லட்சத்திற்கு 152.8 என உள்ளது. சர்வதேச தரநிலை 222 ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.*

*சிறைகளில் அனுமதிக்கப்பட்ட அளவை விட 130% அதிகமாக நிரம்பியுள்ளன. இவர்களில் மூன்றில் இரண்டு பங்கு கைதிகள் (77.1%) விசாரணை அல்லது வழக்கு நிறைவடைவதறகாகக் காத்திருக்கின்றனர். மத்திய அரசு வழங்கிய நிதியை பெரும்பாலான மாநிலங்கள் முழுமையாகப் பயன்படுத்தவில்லை. காவல்துறை, சிறைச்சாலைகள் மற்றும் நீதித்துறையின் மீது மாநிலங்களின் செலவின் அதிகரிப்பு மாநில செலவினங்களின் ஒட்டுமொத்த அதிகரிப்புக்கு இணையாக இல்லை.*

ஒட்டுமொத்த நீதி அமைப்பும் குறைந்த அளவு பட்ஜெட் ஒதுக்கீட்டால் பாதிக்கப்பட்டுள்ளது. தில்லி மற்றும் சண்டிகர் ஆகிய இரண்டு யூனியன் பிரதேசங்களைத் தவிர, வேறு எந்த மாநிலமும் அதன் மொத்த ஆண்டு செலவினத்தில் 1 சதவீதத்திற்கு மேல் நீதித்துறைக்குச் செலவிடுவதில்லை.

80% மக்கள் பெறத் தகுதி பெற்றுள்ள இலவச சட்ட உதவிக்கு, தனிநபர் பங்கு ஆண்டுக்கு ரூ.3.87 மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்திய நீதி அறிக்கை குறித்து கருத்து தெரிவித்த ஓய்வுபெற்ற நீதிபதி மதன் பி. லோகூர்** கூறுகையில், "பன்முகத்தன்மை, பயிற்சி மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் புதிய பரிமாணங்களைச் சேர்ப்பதில் மாநிலங்கள் கடந்த இரண்டு நிகழ்வுகளை விட கணிசமான அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளன என்பதை மூன்றாவது IJR காட்டுகிறது. சில மாநிலங்கள் தங்கள் செயல்திறனை வியத்தகு முறையில் உயர்த்தியுள்ளன, ஆனால் ஒட்டுமொத்தமாக நிறைவற்றவேண்டியவை பெருமளவில் உள்ளது. காவல்துறையைப் பொறுத்த வரையில், காவல்துறையில் பெண் அலுவலர்கள் குறைவாகவே உள்ளனர். சட்ட உதவி சிறப்பாகவே உள்ளது ஆனால் இன்னும் பெரும்பாலானோருக்கு தரமான இலவச சட்ட உதவி வழங்கப்பட வேண்டும், எங்கள் சேவைகளில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை நமேலும்அதிகரிக்க வேண்டும்." என்றார்.

**இந்திய நீதி அறிக்கை 2022-இன் தலைமை ஆசிரியர் திருமதி மஜா தருவாலா** குறிப்பிடுவதாவது, "நாடுகளின் குழுவின் உறுப்பினராக, மிக முக்கியமாகத் தனக்கான பொறுப்பு என்ற வகையில், 2030 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் நீதி கிடைப்பதை உறுதிசெய்து கட்டமைக்கப்படும் என்று இந்தியா உறுதியளித்துள்ளது. அனைத்து மட்டங்களிலும் பயனுள்ள, பொறுப்புணர்வு மற்றும் உள்ளடக்கிய நிறுவனங்கள். ஆனால் இந்த ஆண்டு IJR-ல் கொண்டு வரப்பட்ட அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள், கடக்க வேண்டிய தூரம் அதிகம் உள்ளது என்பதைக் காட்டுகிறது. உணவு, கல்வி அல்லது சுகாதாரம் போல ஒவ்வொருவருக்கும் மலிவு விலையில் திறமையான மற்றும் அணுகக்கூடிய நீதி சேவைகளை வழங்குவதும் மிகஅவசியமானதாகக் கருதப்பட வேண்டும் என்று நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். இது நிறைவேற, அதிக வளங்களை ஈடுபடுத்த வேண்டும், அதிக அளவில் திறன் கட்டமைக்கப்பட வேண்டும் மற்றும் நீண்டகாலக் குறைபாடுகளைத் தீர்ப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்." என்றார்.

**பரந்த அளவிலான தேசிய புரிதல்கள்:**

**காலி பணியிடங்கள்**

**தேசிய அளவில், IJR 2022 இல், நீதி அமைப்பில் உள்ள காலியிடங்கள்:**

- **காவல் துறை:** 22% (**கான்ஸ்டபிள்கள்**), 29% (**அதிகாரிகள்**)
- **சிறைச்சாலைகள்:** 28% (**அதிகாரிகள்**), 26% (**பணிநிலை ஊழியர்கள்**), 36% (**சீர்திருத்த பணியாளர்கள்**), 41% (**மருத்துவப் பணியாளர்கள்**), 48% (**மருத்துவ அதிகாரிகள்**)
- **நீதித்துறை:** 30% (**உயர் நீதிமன்ற நீதிபதிகள்**), 22% (**துணை நீதிமன்ற நீதிபதிகள்**), 26% (**உயர் நீதிமன்ற ஊழியர்கள்**)
- **சட்ட உதவி:** 12% (DLSA **செயலாளர்**)

சில மாநிலங்கள் காலிய பணியிடங்களைக் குறைத்துள்ளன:

- ***காவல்துறை:*** *காவல் படைத் தொகுதி அதிகாரிகளைப் பொறுத்தவரை காலியிடங்கள் தெலுங்கானா 40% இலிருந்து 26% ஆகவும், மத்திய பிரதேசத்தில் 49% இலிருந்து 21% ஆகவும் குறைந்துள்ளது.*

- ***சிறைச்சாலைகள்:*** *அதிகாரிகள் மத்தியில் பீகார் 66% முதல் 26% வரை குறைந்துள்ளது*

- ***நீதித்துறை****: துணை நீதிமன்ற நீதிபதிகளைப் பொறுத்தவரை திரிபுராவில் 30% இலிருந்து 11% ஆகவும், ஆந்திரப் பிரதேசம் உயர் நீதிமன்ற நீதிபதிகளில் 70% இலிருந்து 19% ஆகவும் குறைந்துள்ளது.*

- ***சட்ட உதவி:*** DLSA *செயலாளர்களைப் பொறுத்தவரை சத்தீஸ்கரில் காலியிடங்கள் 48% இலிருந்து பூஜ்யமாகக் குறைந்துள்ளது.*

***ஜார்க்கண்ட் மற்றும் உத்தரபிரதேசம் மாநிலங்கள் மட்டுமே 5 ஆண்டுகளில் (2017-2022) மூன்று துறைகளில் (நீதித்துறை காவல்துறை மற்றும் சிறைச்சாலைகள்) காலியிடங்களை பெருமளவில் குறைத்தது.***

***பன்முகத்தன்மை***

**SC, ST, OBC** *இட ஒதுக்கீடுகள்: காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கான பதவிகளில்* SC, ST *மற்றும்* OBC *ஒதுக்கீட்டுக்கு உட்பட்ட பதவிகளுக்கான நியமனங்களை கர்நாடக மாநிலம் மட்டுமே தொடர்ந்து பூர்த்தி செய்து வருகிறது.*

*நீதித்துறையைப் பொறுத்தவரை, சார்/மாவட்ட நீதிமன்ற அளவில், எந்த மாநிலமும் இந்த மூன்று பிரிவுகளின் ஒதுக்கீட்டுக்கு உட்பட்ட பதவி நியமனங்களைப் பூர்த்தி செய்யவில்லை. குஜராத் மற்றும் சத்தீஸ்கர் மட்டும்* SC *பிரிவு ஒதுக்கீட்டையும், அருணாச்சலப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் உத்தரகாண்ட்* ST *பிரிவு ஒதுக்கீட்டையும், கேரளா, சிக்கிம், ஆந்திரா, மகாராஷ்டிரா, தமிழ்நாடு, சத்தீஸ்கர் மற்றும் தெலுங்கானா ஆகியவை* OBC*க்கான ஒதுக்கீட்டையும் பூர்த்தி செய்தன.*

*மொத்த நீதி அமைப்பில் (காவல்துறை, சிறைச்சாலைகள், நீதித்துறை* & *சட்ட உதவி) முக்கிய பதவிகளில்* ***பெண்களின் பங்கு****:* 10 *இல்* 1 *பெண்.*

*காவல்துறையில் பெண் பணியாளர்களின் மொத்தப் பங்கு சுமார்* **11.75%** *ஆக இருந்தாலும்***,** *அதிகாரிகள் படிநிலையில்* **8%** *மட்டுமே உள்ளது. உயர் நீதிமன்ற நீதிபதிகளில்* **13%** *மற்றும் சார்புநிலை நீதிமன்ற நீதிபதிகளில்* **35%** *மட்டுமே பெண் பணியாளர்கள். சிறைத்துறை ஊழியர்களில்***,** **13%** *பெண் ஊழியர்கள் உள்ளனர். பெரும்பாலான மாநிலங்களில் வழங்கறிஞர்கள் குழுவில் பெண்களின் பங்கு அதிகரித்துள்ளது. தேசிய அளவில்***,** *இது* **18%** *இல் இருந்து* **25%** *ஆக அதிகரித்துள்ளது.*

***உள்கட்டமைப்பு***

**CCTV*****கள்:*** *சுமார்* 25% -- *அதாவது நான்கில் ஒன்று -- காவல் நிலையங்களில் ஒரு சிசிடிவி கூட நிறுவப்படவில்லை. பத்தில் மூன்று காவல் நிலையங்களில் மகளிர் உதவி மையங்கள் அமைக்கப்படவில்லை.*

***ஆக்கிரமிப்பு:*** *சுமார் 30% (391 சிறைச்சாலைகள்) சிறைச்சாலைகளில் ஆக்கிரமிப்பு விகிதம் ஒதுக்கப்பட்ட அளவை விட 150%க்கும் மேலாக உள்ளது மற்றும் 54% (709 சிறைகள்) சிறைச்சாலைகள் அனுமதிக்கப்பட்ட அளவை விட 100% க்கும் மேலாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.*

***விசாரணைக் கைதிகள்:*** *அந்தமான் & நிக்கோபார் தீவுகள், அருணாச்சலப் பிரதேசம், மிசோரம், திரிபுரா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியவற்றைத் தவிர மற்ற பிற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சிறையிலுள்ள விசாரணைக் கைதிகளின் எண்ணிக்கை 60% க்கும் மேலாக உள்ளது.*

***பணிச்சுமை***

***நீதித்துறை:***

- ***நிலுவையில் உள்ள வழக்குகள்***: *28 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில், உயர்நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளில் நான்கில் ஒன்று, ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது. 11 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளில் நான்கில் ஒன்று, ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது.*
- ***மக்கள் தொகை சார்ந்து ஒரு சார்புநிலை நீதிமன்ற நீதிபதிக்கான விகிதம்***: *71,224 நபர்கள்*
- ***மக்கள் தொகை சார்ந்து ஓர் உயர் நீதிமன்ற நீதிபதிக்கான விகிதம்***: *17,65,760 நபர்கள்*

***காவல் துறை:***

***மக்கள் தொகை சார்ந்து ஒரு பொது காவல் நிலையத்துக்கான விகிதம்:*** *831 நபர்கள்*

***சிறை:***

***மருத்துவ அதிகாரிகள்***: *இந்தியாவில் 554,000 சிறைக் கைதிகளுக்கு 658 மருத்துவ அதிகாரிகள் என்ற நிலையில் சராசரியாக 842 கைதிகளுக்கு ஒரு மருத்துவரே உள்ளார்.*

***நீதித் துறைக்கான பட்ஜெட் ஒதுக்கீடு குறித்த கண்ணோட்டம்***

***சட்ட உதவி:*** *தேசிய சட்ட சேவைகள் ஆணையம் (NALSA) மற்றும் மாநில/யூனியன் பிரதேச அரசாங்கங்களின் செலவு உட்பட, சட்ட உதவிக்கான செலவுகளில் தேசிய அளவில் தனிநபர் பங்கு ஆண்டுக்கு 4.57 ரூபாய் மட்டுமே. இதில் NALSAவின் செலவுகளைத் தவிர்த்தால் இத்தொகை ரூ. 3.87 ஆகக் குறைகிறது, NALSA இன் செலவுகளை (2021-22) மட்டுமே கணக்கில் கொண்டால் தேசிய அளவில் தனிநபர் பங்கு ரூ. 1.06 மட்டுமே.*

***சிறைச்சாலைகள்:*** *சிறைச் சாலைகளுக்கான செலவினங்களில் தேசிய அளவில் தனிநபர் பங்கு ரூ. 43 ஆக உள்ளது. தேசிய அளவில், ஒரு கைதிக்கு ஆகும் சராசரி செலவு ரூ. 43,062 இலிருந்து ரூ. 38,028 ஆகக் குறைந்துள்ளது, ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் ஒரு கைதிக்கான அதிகபட்ச ஆண்டு செலவு ரூ.211,157 ஆகும்.*

***நீதித்துறை:*** *நீதித்துறைக்கான செலவினங்களில் தேசிய அளவில் தனிநபர் பங்கு ரூ. 146 ஆகும். எந்த மாநிலமும் அதன் மொத்த ஆண்டு செலவினத்தில் ஒரு சதவீதத்திற்கு மேல் நீதித்துறைக்கு ஒதுக்குவதில்லை.*

India Justice Report | 2022

***காவல்துறை:*** *காவல்துறைக்கான செலவினங்களில் தேசிய அளவில் தனிநபர் பங்கு ரூ.* 1151 *ஆகும், இதுவே இந்த நான்கு துறைகளுக்கான ஒதுக்கீட்டில் அதிக அளவில் உள்ளது.*

*சில உடனடி மற்றும் அடிப்படை திருத்தங்களை* IJR 2022 *மீண்டும் வலியுறுத்தியுள்ளது. காலிப் பணியிடங்களை அவசரமாக நிரப்புதல் மற்றும் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல் ஆகியவற்றைக் கொடியிட்டுக் கட்டியுள்ளது. மீள இயலாத மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில், நீதி வழங்கலை ஓர் அத்தியாவசிய சேவையாக மாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.*

**---------**

**Notes to the Editor:**

1. For key findings on each pillar, please refer to the National Factsheet.
2. For further details and perspective please refer to respective pillar backgrounders or visit: https://indiajusticereport.org/
3. For an interactive web-visualization to compare and assess states, please visit: https://indiajusticereport.org/
4. The India Justice Report 2022, national factsheet and an interactive web output will be available at https://indiajusticereport.org/
5. The IJR 2022 uses the latest official data available at the time of going to press: for the police it is 1 January 2022; prisons 31 December 2021; judiciary uses data from 2022 and 2023; and for legal aid for 2021-22 and March and June 2022. Population figures are sourced from the National Commission on Population 2019 and budget figures rely on Comptroller and Auditor General reports and state budget documents for 2020-21

**For further details, please contact:**


| | | |
|---|---|---|
| Valay Singh<br>India Justice Report<br>E: valaysingh@gmail.com<br>M: 9717676026 | Jeunelle Rebello<br>Current Global<br>E: jrebello@currentglobal.com<br>M: 8806749170 | Nayantara Dutta<br>Tata Trusts<br>E: ndutta@tatatrusts.org<br>M: 9819052678 |